1979 மார்ச் 17]

(உ) அரிசனங்களுக்கு அணைக்காரப் பட்டியில் ஒதுக்கப் பெற்ற சுடுகாடு நிலம் உயர்ந்த சாதியினரால் ஆக்கிரமித்துக் கொள்ளப் பெற்றிருப்பது குறித்து :

*திரு. இரா. தாமரைக்கனி: தலைவர் அவர்களே, ''திருவில்லிப்புத்தூர் தொகுதி வ. புதுப்பட்டி பஞ்சாயத்தைச் சேர்ந்த அணைக்காரப்பட்டி கிராமத்தில் வாழும் அரிசனங்களுக்கு ஒதுக்கப்பட்ட சுடுகாடு நிலத்தை உயர்ந்த சாதியினர் விவசாயம் செய்யப் பயன்படுத்துவதால் எழுந்துள்ள பதட்ட நிலை குறித்து'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவர் அவர்களே, திருவில்லிப்புத்தூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திருவில்லிப்புத்தூர் தொகுதி வ. புதுப்பட்டி ஊராட்சியில் உள்ள அணைக்கரைப்பட்டி கிராம அரிசனங்களின் சுடுகாட்டு நிலம் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டதெனவும், ஆக்கிரமிப்பை வெளியேற்றும் படியும் செப்டம்பர் 1978-ல் கேரினார்.

2. இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர், திருவில்லிப் புத்தூர் வட்டாட்சியரை, அணைக்கரைப்பட்டி, அரிசனங்களில் சுடுகாட்டு நிலத்தில் செய்துள்ள ஆக்கிரமிப்பை துரித நடவடிக்கை எடுத்து வெளியேற்றும்படி பணித்தார். அணைக்கரைப்பட்டியில் அரிசனங்களின் சுடுகாட்டு நிலத்தை திரு. வடக்குத்திய தேவர் என்பவர் ஆக்கிரமிப்பு செய்துள்ளார். ஆக்கிரமிப்பை வெளியேற்ற, திருவில்லிப்புத்தூர் வட்டாட்சியர் எடுத்த நடவடிக்கையை எதிர்த்து, திரு வடக்குத்திய தேவர், திருவில்லிபுத்தூர் மாவட்ட முனிசிப் நீதிமன்றத்தில் 688/78 எண்ணிட்ட உரிமையியல் வழக்கு மற்றும் 1117/78 எண்ணிட்ட உறுத்துக் கட்டளை மனு (Injunction Application) தொடர்ந்துள்ளார். வழக்கை எதிர்த்து எதிர் ஆணை யுறுதிப் பத்திரம் (Counter Affidavit) மற்றும் எழுதிய வாக்கு மூலம் (Written Statement) 24—1—1979 அன்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டன. ஆக்கிரமிப்பு வெளியேற்ற நடவடிக்கையை எதிர்த்து வழக்கு தொடரப் பட்டுள்ளதால், வழக்கு முடிந்து தீர்ப்புரை கிடைத்தபின் மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

[பிற்பகல் 12.10]

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, நமது தாழ்த்தப்பட்ட அமைச்சர் அவர்களும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அங்கு சுடுகாடு இல்லை என்று சொல்கிறார்கள்;

கிராம முன்சீபே அந்த இடத்தை ஆக்கிரமித்துக் கொண்டிருப்பது வேலியே பயிரை மேய்வது போல் இருக்கிறது. அங்குள்ள கிராம முனிசீப்பும் அங்குள்ள உயர் ஜாதி மக்களும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு சுடுகாடு இல்லை என்று வாதம் செய்கிறார்கள். இதன் காரணமாக அங்குள்ள மக்கள் தங்கள் வீடுகளில் ஏற்படுகின்ற இறப்பின்போது, பிணங்களை தங்கள் வீடுகளுக்கு முன்னால் உள்ள முற்றத்திலோ அல்லது கொல்லைப்புறத்திலோ கொண்டு போய் புதைக்கிறார்கள். இனிமேல் அதற்கும் வசதியில்லாதவர்கள் தங்கள் வீடுகளில் குடுவையில் தான் வைத்துக் கொள்ள வேண்டிய நிலைமை ஏற்படும். இனிமேல் நான் எங்கள் பகுதியில் தாழ்த்தப்பட்ட மக்களின பிரேதம் விழுந்தால் அந்த பிரேதத்தை நானே இங்கு சென்னைக்கு கொண்டு வந்து * * *

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவர் அவர்களே, ஆக்கிரமிப்பு செய்துள்ளவர்கள் நீதிமன்றத்தில் ஸ்டே வாங்கியிருப்பதால்தான் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கவில்லை என்று குறிப்பிட்டேன். என்னைப் பொறுத்த வரையில், வேலியாக இருந்துகொண்டு உள்ளே மேய விரும்பவில்லை. இந்த மக்களுக்கு பாதுகாப்பாக இருந்து கொண்டிருக்க வேண்டும் என்றுதான் நானும் இந்த அரசும் பொறுப்பேற்றிருக்கிறோம் என்பதை மாண்புமிகு தாமரைக்கனி அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் அவர்கள் சொன்னதைப் போல் எந்தவிதமான நிலையும் இல்லை என்பதையும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இந்த அரசாங்கத்தைப் பொறுத்த வரையில் யார் ஆக்கிரமிப்பு செய்திருந்தாலும் அதை அகற்றி தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அந்த இடத்தை கொடுக்க முன் வருமே தவிர இந்த காரியத்தில் ஈடுபட்டவர்களுக்கு துணை போக இந்த அரசோ அல்லது இந்தத் துறையை பொறுப்பேற்றிருக்கிற நானோ தயாராக இருக்க மாட்டோம் என்பதை சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவர்களுடைய பகுதியில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு பிணங்களை புதைப்பதற்கு தற்போது இடமில்லை [* *] என்று ஆவேசமாக சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் சொல்ல விரும்புவது, இப்போது அவர்கள் பயன்படுத்துகின்ற சுடுகாடு எதுவாக இருந்தாலும் அங்கு பிணங்களை புதைப்பதற்கு தகுந்த பாதுகாப்பு தரப்படும். மாண்புமிகு உறுப்பினர் தாமரைக்கனி அவர்கள் ஏற்கனவே பலமுறை அங்குள்ள சிரமங்களை கூறியிருக்கிறார்கள். அது எனக்கும் தெரியும். இருந்தாலும் அங்குள்ள மக்கள் இப்போது புதைக்கிற இடத்திலேயே புதைப்பதற்கு இப்போதும் தாயராக இருக்கிறாாகள் என்பதுதான் எனக்கு வந்த தகவல், ஆகவே இதை தொடர்ந்து செய்வதற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உறுதுணை புரிய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

1979 மார்ச் 17]

திரு. க. சுப்பு : பாயின்ட் ஆப் ஆர்டர், இங்கு எழுப்பப் பட்ட கேள்விக்கு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போதும், ஏதோ உறுப்பினர் அவர்கள் * * * என்றும் அதற்கு அமைச்சர் அவர்கள் சொன்ன பதில் அதற்கு தயாராக இல்லை என்று சொல்வது மாதிரியும் இருந்தது. இவை யெல்லாம் அனுமதிக்கப்படலாமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தாமரைக்கனி அவர்கள். பேசும்போது சற்று வினயமாக பேசுவதற்கு முயற்சி செய்யுங்கள்.

திரு. இரா. தாமரைக்கனி : நான் பேசும்போது, அமைச்சரை வேலியே பயிரை மேயலாமா என்று சொல்லவில்லை, அங்குள்ள கிராம முனிசீபும் உயர்ஜாதி மக்களும் இருந்து வருவதைத்தான் குறிப்பிட்டேன். நான் ஆவேசமாக பேசினேன் என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அங்குள்ள தாழ்த்தப்பட்ட மக்க ளின் நிலைமை ஆவேசப்படும்படியான நிலைமையில் இருப்பதால் தான் அப்படி சொன்னேன். நான் கூறியவை சபைக் குறிப்பு களில் இருக்கக்கூடாது என்றால் அவற்றை நீக்கிவிடும்படி கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தாமரைக்கனி அவர்கள் பேசும்போது குறிப்பிட்ட * * * என்று சொன்ன வாக்கி யங்களை நீக்கிவிடுமாறு உத்தரவிடுகிறேன்.

(௩) தஞ்சை மாவட்ட தாளடிப்பயிருக்கு மேட்டூர் அணை யிலிருந்து தண்ணீர் விடுவது குறித்து.

*திரு. செ. வி. சவுந்தரராஜன் : தலைவர் அவர்களே '' தஞ்சாவூர் மாவட்டத்தில் 1978 அக்டோபர், நவம்பர் மாதங் களில் பெய்த பெருமழையின் காரணமாக தாளடிப் பயிர் வீணாகி மீண்டும் நடவு, நட்ட பயிர் கெடாதிருக்க 1979ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 31ஆம் தேதிவரை மேட்டூர் அணையி லிருந்து தண்ணீர் விட வேண்டிய அவசியம் குறித்த '' பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மை மற்றும் பாசனத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, மேட்டூர் நீர்த் தேக்கத்திலிருந்து பாசனத்திற்குத் தண்ணீர் விடுவதை ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 28ஆம் தேதி நிறுத்தி

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்ற பெற்றது.